பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 30 திங்கட்கிழமை 14.03.2022 கதிர் 363

## புதிய கொரோனாத் திரிவாக ‘டெல்டாக்ரோன்’ களத்தில்!

டெல்டாக்ரோன் என்ற புதிய கொரோனா திரிவு உருவாகியிருப்பதை உலக சுகாதார அமைப்பு உறுதிசெய்துள்ளது.

அது டெல்டா, ஒமிக்ரோன் வைரஸ் திரிவு வகைகளின் கலவையாக உருவெடுத்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கொரோனா வைரஸ் வகை குறித்த ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் மரியா வான் கெர்கோவ் ☞2

# பஸிலுக்கு எதிராகப் பிரேரணை!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நாட்டின் நிதி நிலைவரம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறாமை, நிதி நெருக்கடியை ஏற்படுத்தியமை, மக்கள் மீது விலையேற்றம் என்ற சுமையைத் திணித்தமை உட்பட மேலும் சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டே பிரேரணை முன்வைக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரசகூட்டணிக்குள் மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், ஆளுந்தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்துள்ளது. சாதாரண பெரும்பான்மைகூட ஊசலாடும் மட்டத்திலேயே உள்ளது. ☞2

# யாழ். மாவட்டச் செயலகமா? அரசியல் கட்சி அலுவலகமா?

## சீற்றத்துடன் ஈ.பி.டி.பி. போராட்டம்

**யாழ்ப்பாணம்,மார்ச்14**

**யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மக்கள் அபிவிருத்தி திட்டங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை, அவை ஓர் அரசியல் கட்சி சார்பான நடவடிக்கைகள் போல முன்னெடுக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டு அந்தப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் இன்று திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.** ☞2



## ஜே.வி.பியின் போராட்டம் 18 ஆம் திகதி கொழும்பில்

இந்த ஆட்சியாளர்களை விரட்டும் ஜே.வி.பியின் போராட்டம் வரும் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

தற்போதைய ஆட்சியை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முன்வருவார்களாக இருந்தால், அதற்கு தலைமைத் தாங்குவதற்கும் தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ☞2

### பிரச்சினைகளுக்குத் தீர்வு காண

## அரசுக்கு சஜித் அணி ஒரு மாதம் காலக்கெடு

### இல்லையேல் விரட்டியடிப்போம் எனவும் சூளுரை



நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடு வழங்கப்படும். அவ்வாறு இல்லையேல் எமது போராட்டம் தீவிரமடையும். ஜனநாயக வழியில் அரசை விரட்டியடிப்போம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் ☞2

## எரிபொருள், எரிவாயு கியூ; 7 மாதங்களுக்கு நீடிக்கும்!

### கையை விரிக்கிறார் புதிய அமைச்சர்

தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையை முடிவுக்கு கொண்டு வர குறைந்தது இன்னும் ஏழு மாதங்களாகும் என்று புதிதாக எரிசக்தி அமைச்சராகப் பதவியேற்ற காமினி லொகுகே தெரிவித்தார். உலக அரங்கில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் திணறுகிறது என்றும் அவர் கூறினார்.

உலகளாவிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாட்டுக்கு டொலர்களை கொண்டு வருவதற்கு ☞2

## கோட்டா ஆட்சியில் பட்டினிச்சாவு!

### மைத்திரி விளாசல்



நல்லாட்சியில் மக்கள் மூன்று நேரமும் உணவு அருந்தினார்கள். ஆனால், இந்த ஆட்சியில் பட்டினிச்சாவை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

- இவ்வாறு விளாசித் தள்ளினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

தேசிய அரசமைக்கும் முயற்சிக்கு எமது கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது என்பதைத் திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மொனறாகலை மாவட்டக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ☞2

## பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு!

### பொகவந்தலாவையில் சோகம்; பொலிஸ் தீவிர விசாரணை



பொகவந்தலாவை, செல்வகத்தை தோட்டப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பாடசாலை மாணவன் ஒருவனின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் பாரதி தர்ஷன் (வயது - 18) ☞2

## ஜே.வி.பியின் போராட்டம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரிவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 74 வருடங்களாக ஆட்சி செய்த ஆட்சியாளர்கள், நாட்டு மக்களின் நம்பிக்கையை இல்லாதொழித்துள்ளனர். எனினும் தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மக்கள் வைத்துள்ளனர். நாட்டில் ஆட்சிக்கு வரும் அனைத்து கட்சிகளும் தங்களது எதிர் கட்சிகளை பழிவாங்குவதையும், அதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் செய்த வேலைத்திட்டங்களை இல்லாதொழிப்பதையுமே செய்து, நாட்டை சூறையாடியுள்ளன. அது மாத்திரமன்றி நாட்டின் வளங்களையும் வெளிநாடுகளுக்கு வழங்கி நாட்டு மக்களையும் கடனாளியாக மாற்றி இருக்கிறார்கள். இதனை மாற்ற வேண்டும். ஊழலற்ற, வீண் விரயமற்ற, நேர்மையான நபர்களைக் கொண்ட ஆட்சியே நாட்டுக்கு இப்போது தேவைப்படுகிறது.

இந்த மாற்றத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் செய்ய முடியாது. காரணம், அவரின் அருகில் இருப்பவர்களும் ஊழல்வாதிகளே. நாட்டு மக்களை வதைக்கும் இந்த ஆட்சியை விரட்டியடிப்பதற்கு மக்கள் முன்வருவார்களாக இருந்தால் அதற்குத் தலைமை தாங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

இந்த ஆட்சியை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும், விலைவாசி அதிகரிப்பை உடன் நிறுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், எமது நாட்டின் வளங்களை வெளிநாட்டுக்கு விற்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் இம்மாதம் 18ஆம் திகதி பாரிய ஆர்பாட்டத்தை மேற்கொள்ள உள்ளோம் தெரிவித்தார்.

## கோட்டா ஆட்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சர்வதேசத்துடன் நல்லுறவு இருக்கவில்லை. ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தினர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்திருந்த போது, அமைச்சர் ஒருவரே அவருக்குத் திருமண அழைப்பிதழை விடுத்தார். எனினும், நல்லாட்சியில் சர்வதேசத்துடனான உறவை பலப்படுத்தினேன். சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றேன்.

நல்லாட்சியில் மக்கள் மூன்று நேரமும் உணவு அருந்தினார்கள். உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. மக்கள் வீதிகளில் வரிசைகளில் நிற்கவில்லை. இந்த ஆட்சியில் எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. பட்டினிச்சாவை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் - என்றார்.

## பாடசாலை மாணவன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற மாணவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை ,சென்மேரீஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியைக் கண்டு களித்துவிட்டு வீடு திரும்பிய நிலையில் குறித்த மாணவன் காணாமல்போயுள்ளார்.

மாணவனை நீண்ட நேரம் காணவில்லை என உறவினர்கள் தேடிய நிலையில், குறித்த மாணவனின் சடலம் கிணறு ஒன்றில் இருப்பதை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு பொகவந்தலாவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுக்கு சஜித் அணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்கு எதிராக மார்ச் 15 ஆம் திகதி கொழும்பில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும். அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடுவை வழங்குவதற்கான அறிவித்தலை விடுக்கவே நாம் கொழும்பு வருகின்றோம்.

அந்தக் காலப்பகுதிக்குள் தீர்வு இல்லையேல் எமது போராட்டம் வலுக்கும்.

கொழும்பு வருவதற்கு பஸ் இல்லாவிட்டால் மக்கள் நடந்தாவது வருவார்கள். எனவே, எமது போராட்டத்தைத் தடுக்க முற்படவேண்டாம். நிச்சயம் எமது பலத்தைக் காட்டுவோம் - என்றார்.

## எரிபொருள், எரிவாயு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேங்காய்களை விற்க முடியாது எனவும், டொலர்களை கொண்டு வருவதிலுள்ள சிரமத்தின் ஆரம்ப கட்டத்தில் உள்ளோம் என்றும் தெரிவித்தார்.

எனவே, சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதியை பலப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்றார்.

தற்போதைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கு குறைந்தது ஏழு முதல் எட்டு மாதங்கள் எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள், எரிவாயு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அரச சுற்று நிருபங்களை முறையாக நடைமுறைப்படுத்து!', 'மாவட்ட செயலகம் அரசியல் கட்சி அலுவலகமா?', 'மாவட்ட செயலாளரே! அதிகாரியாகத் துணிந்து செயல்படுங்கள்!' - போன்ற கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இப்போராட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சார்ந்த நிர்வாக செயலாளர்களான இராமநாதன் ஐங்கரன், ஸ்ரீரங்கேஸ்வரன், சிவகுரு பாலகிருணன், வேலணை பிரதேச சபை தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி, வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த், முன்னாள் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அக் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், கட்சி சார்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

## பஸிலுக்கு எதிராகப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பிரதான எதிரணி இப்படியொரு வியூகத்தை கையாள எதிர்பார்த்துள்ளது.

## புதிய கொரோனாத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை உறுதிசெய்தார்.

அந்த வகை திரிவினால் பாதிக்கப்பட்டவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த வைரஸ் வகை குறித்து கவலைப்படுவதா என்பதை இப்போது உறுதி செய்யமுடியாது என்று உலக சுகாதார அமைப்பு கூறியது.

தற்போது சில பாதிப்புகள் பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

அதனுடன் தொடர்புடைய சுமார் 30 சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன பிரிட்டன் சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் கூறியது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும்
திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இங்கும் 'அரபு வசந்தம்'!

தற்போதைய ஆட்சிப் பீடத்திற்கு எதிராக கொழும்பில் பெரும் எதிர்ப்பு போராட்டத்தை நாளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

நாட்டில் மிக மோசமான பொருளாதார நிலைமை. குறுகிய காலத்தில் நெருக்கடி உச்சத்தைத் தொட்டு இருக்கின்றது. ஆட்சிக்கு எதிரான திட்டல்கள், வசவுகள், தூற்றல்கள் வீடுகள் தோறும் ஒலிக்கத் தொடங்கியிருக்கும் இச்சமயத்தில் பிரதான எதிர்க்கட்சி ஆட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சி நடவடிக்கையை நாளை இந்த எதிர்ப்பு நிகழ்வுடன் ஆரம்பிக் கின்றது.

அனைத்து அரசியல் தரப்புகளையும் ஒன்றிணைத்து, நாட்டின் இப்போதைய நெருக்கடிகளுக்கு சுமூக தீர்வை விரைந்து எட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதற்கு ஜனாதிபதிக்கு ஒரு மாதம் காலக்கெடு விதித்திருப்பதாகக் கூறும் பிரதான எதிர்க்கட்சி, ஆளும் தரப்பு இந்த ஒரு மாத காலத்துக்குள் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் முழு ஆட்சிப்பீடத்தையே வீட்டுக்கு அனுப்பும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முழுவீச்சில் மேற் கொள்ளப்படும் என்று எச்சரித்திருகின்றது.

ஜனாதிபதி தன்னுடையதும், தனது குடும்பத்தினரதும் நலன்சார்ந்த முரட்டு பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களுக்கு நீதியான ஒரு தீர்வைக் காண இறங்கி வராவிட்டால் 'அரபு வசந்தம்' போன்ற புரட்சி நாட்டில் வெடிக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்திருக்கின்றது.

ஜனநாயக உரிமைகளுக்காக அரபு நாடுகளில் நடந்த மக்கள் எழுச்சியே அரபு வசந்தம். இது ஏறத்தாழ ஒரே சமயத்தில் – 2010 வசந்தகாலத்தில் – அரபுநாடுகளில் தொடங்கியதால் 'அரபு வசந்தம்' எனப்பட்டது. துனிசியா, மொராக்கா, சிரியா, லிபியா, எகிப்து, பஹ்ரைன், யேமன் உள்ளிட்ட பல நாடுகளில் லட்சக்கணக்கில் மக்கள் அலை அலையாக வீதிக்கு இறங்கி ஜனநாயகப் புரட்சியில் ஈடுபட்டனர். மொரோக்கோ, ஈரான், அல்ஜீரியா, ஈராக், லெபனான், ஜோர்டான், குவைத், ஓமான், சூடான் என்று இஸ்லாமிய நாடுகள் எங்கும் தன்பாட்டிலேயே இயல்பாகவே மக்கள் லட்சக்கணக்கில் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அரபு தேசங்கள் எங்கும் ஒரே சமயத்தில் புரட்சிகள் வெடித்தன.

இந்தக் கிளர்ச்சியால் துனிசியா, எகிப்து மற்றும் லிபியா போன்ற நாடுகளில் ஆட்சி மாற்றங்களும் ஆட்சி முறை மாற்றங்களும் ஏற்பட்டன.

ஆட்சியை எதிர்த்து வீழ்த்தும் மக்கள் புரட்சியைக் குறித்து நிற்பதுதான் அரபு வசந்தம். இங்கும் அது அரங்கேறும் என எச்சரித்திருக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி.

இத்தகைய போராட்டங்கள் முழு மக்கள் எழுச்சியாக வெடிக்க வேண்டும். தனிக்கட்சி விவகாரமாக ஒப்பேறுவது சாத்தியமில்லை.

எனவே, அரசுக்கு எதிரான – இந்த ஆட்சி பீடத்தை எதிர்க்கின்ற – சகல அரசியல் தரப்புகள், மக்கள் இயக்கங்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்தால்தான் ஜனநாயக வழிமுறைகளில் ஏதேனும் மாற்றங்களைக் கொண்டு வர முடியும். அத்தகைய கூட்டு முயற்சிகள்தான் கட்டுறுதியான செயற்பாடுகளாக, பயனை ஈட்டித் தருவனவாக அமைய முடியும். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி இதனை அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. ஆட்சி பீடத்தின் தவறைத் தனது கட்சிக்கான – அல்லது கூட்டுக்கான – அரசியல் சாதகமாக மாற்றும் எத்தனமாகவே அதன் இந்த முயற்சி தோன்றுகின்றது. ஆட்சிப் பீடத்துக்கு எதிரான மக்கள் எழுச்சியைத் தூண்டி, நியாயமான மாற்றம் ஏற்படச் செய்வதை விடுத்து, தனிக்கட்சி அல்லது தனது கூட்டமைப்புக்கான நலனை இலக்கு வைத்து அது செயல்படுவது பொருத்தமற்றது. மக்களின் இன்றைய இக்கட்டு நிலையில் 'தவிச்ச முயல் அடிக்கும்' தவறான தந்திரமாகவும் இது அமைந்து விடும். ஆகவே, எல்லா எதிர்த் தரப்புகளையும் ஒன்றிணைத்து, இந்த போராட்டத்தை கட்டுறுதியாக முன்னெடுப்பது குறித்து சஜித் பிரேமதாஸா தரப்பு சிந்திக்கவேண்டும்.

## தமிழ் மக்களினது இருப்பிற்கு இந்தியா என்றும் குந்தகம் விளைவிக்க கூடாது!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

அபிவிருத்தி என்னும் போர்வையில் திருகோணமலை மாவட்டத்தில் கால் பதிக்கும் இந்தியா, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்மக்களது அபிலாஷைகளுக்கு எதிராக தன்னுடைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இருப்பை பயன்படுத்தக்கூடாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஸ்ரீ ஞானேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –திருகோணமலையின் எண்ணெய் குதங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தியுள்ள இந்தியா, தற்போது சம்பூர் பகுதியில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இருக்கின்றது.

இதன்மூலமாக திருகோணமலையின் இரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டில் செல்ல இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இது ஒரு போதும் தமிழ் மக்களது இருப்பிற்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். யாழ்.போதனாவில் இன்றுமுதல் நிறுத்தம்!

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை இன்று (திங்கட்கிழமை) முதல் மேற்கொள்ளப்படமாட்டாது என வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மாதிரி சேகரிப்பு பணியிலிருந்து வைத்தியர்கள் விலகுகின்றமையால் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை நிறுத்தப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நோயாளிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 50 கிலோ எடையுடைய சிமெந்து விலை எகிறல்!

50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் விலை 350 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் புதிய விலை 1,850 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சீமெந்து மூடையின் விலை தற்போது 1,500 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## வழமைக்குத் திரும்பியுள்ளது பாடசாலை கற்றல் நடவடிக்கை



இலங்கையில் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட தனியார் பாடசாலைகளில் மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்று முதல் அனைத்து தரங்களில் கல்வி கற்றும் மாணவ மாணவியர் முழுமையாக பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கொவிட் பெருந்தொற்று நிலைமைகளை கருத்திற் கொண்டு பாடசாலை கற்றல் நடவடிக்கைகளுக்காக மாணவர்கள் குழுக்களாக அழைக்கப்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு மாணவ மாணவியருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி மாணவன் உயிருடன் இல்லை!

### யாழில் துயரம்

யாழில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் பெறுபேறுகளை பெறுவதற்கு உயிருடன் இல்லை என்பது பெரும் துயரமாக மாறியுள்ளது.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் தரம் 05 இல் கல்வி பயின்ற வ.அஜய் என்றமாணவன்அண்மையில்உயிரிழந்தார். டெங்கு நோய் தொற்று காரணமாக குறித்த மாணவன் உயிரிழந்தார்.

இந்நிலையில் கடந்தாண்டுக்கான ஐந்தாமாண்டுபுலமைப்பரிசில்பரீட்சைக்கான பெறுபேறுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியாகின. இதில் குறித்த 155 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். யாழ். மாவட்ட வெட்டுப்புள்ளி 148 என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவன் டெங்கு நோயால் உயிரிழந்த தினத்தன்று அவர் பரீட்சையில் சித்தியடைவார் என அவரது ஆசிரியர் பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# 200 பொருள்களை ஏற்றுமதி செய்ய ரஷ்யா தடை



மேற்கத்திய நாடுகளுக்கு பதிலடி தரும் வகையில் ரஷ்யாவிலிருந்து 200 வகையான பொருள்களின் ஏற்றுமதியை இந்த ஆண்டுவரை தடைசெய்ய ரஷ்ய அரசு அதிரடியாக உத்தர விட்டுள்ளது.

இந்த தடையில் இயந்திரங்கள் மின்னணு பொருள்கள், கார்கள், உதிரிபாகங்கள், உணவுப் பொருள்கள், வேளாண் உபகரணங்கள், மருந் துப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், ரயில் என்ஜின்கள், ரயில் பெட்டிகள், கண்டெய்னர்கள், டர்பைன்கள், உலோகங்கள், விலை உயர்ந்த கற்கள், கட்டிங் எந்திரங்கள், வீடியோ டிஸ்ப்ளே பிரஜெக்டர், கன்சோல் ஸ்விட்போர்டு என 200 இந்த ஆண்டு இறுதிவரை மேற்கு நாடுகளுக்கும், பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய ரஷ்ய அரசு தடை விதித்துள்ளது.

ஆனால் யூரோசியா பொருளாதாரக் கூட்ட மைப்பில் உள்ள அப்காஜியா தெற்கு ஆசெட்டியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தடையில் லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு வகையான மரங்கள் மரப்பொருள்கள் மரத்தில் செய்யப்பட்ட பெட்டிகள் என எந்த பொருள்களையும் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

## அனைத்துலக விண்வெளி நிலையம் சீர்குலையும்: ரஷ்யா எச்சரிக்கை



ரஷ்யாவுக்கு எதிராக விதிக் கப்பட்ட தடைகளால் அனைத் துலக விண்வெளி நிலையம் சீர்குலையும் என்று ரஷ்ய விண்வெளி அமைப்பின் தலைவர் டிமிட்ரி ரோகோஸின் (Dmitry Rogozin) எச்சரித் துள்ளார்.

ரஷ்யாவைத் தண்டிக்கும் விதத்தில் விதிக்கப்பட்டுள்ள தடைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று அவர் கோரி னார்.

ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத்ததைக் கண்டிக்கும் விதத்தில் மேற்கத்திய நாடுகள் அதன் மீது பல தடைகளை விதி த்துள்ளன.

சில தடைகளால், அனைத் துலக விண்வெளி நிலையத் துக்குச் சேவையாற்றும் ரஷ்ய விண்கலன்களின் செயற்பாடு கள் தடைபட்டுள்ளன என அவர் சொன்னார்.

இதனால், விண்வெளி நிலையத்தில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பிரிவு பாதிக்கப்படலாம். 500 தொன் எடை கொண்ட கட்டமைப்பு பூமியிலோ, கடலிலோ விழுந்து சீர்குலையலாம் என்றார் திரு. ரோகோஸின்.

அமெரிக்க விண்வெளி அமைப்பான Nasa, அனைத் துலகவிண்வெளிநிலையத்தை ரஷ்யாவின் உதவியின்றி சுற்றுப்பாதையில் வைத்துக் கொள்ள, வழிகளை ஆராய்ந்து வருவதாக இந்த மாதத் தொடக்கத்தில் கூறியி ருந்தது.

ரஷ்யப் பிரிவுக்கான விண்வெளி வீரர்களையும் பொருள்களையும் Soyuz விண்கலம் கொண்டு செல் கிறது.


அதைப் பாய்ச்சுவதற்கான உபகரணங்களுக்கு அமெ ரிக்கா சென்ற ஆண்டு முதல் தடை விதித்துள்ளது. இந்த ஆண்டு முதல் அவை ஐரோப் பிய ஒன்றிய, கனடியத் தடை களின் கீழ் வருகின்றன.

அவை சட்டத்துக்குப் புறம்பானவை என்று கூறி, அவற்றை நீக்கும்படி கோரிக்கை விடுத்திருப்பதாக ரஷ்யா கூறியது.

ரஷ்யாவும், அமெரிக்காவும் தொடர்ந்து ஒத்துழைக்கும் கடைசி சில தளங்களில் ஒன் றாக விண்வெளிவிளங்குகிறது.

அமெரிக்க உந்துகணைக ளுக்கான இயந்திரங்களின் விநியோகத்தை நிறுத்தப் போகிறேன் என அறிவித்தார்.

அமெரிக்கா இனி துடைப் பக்கட்டையைக் கொண்டுதான் விண்வெளிக்குச் செல்ல வேண்டும். என்று அவர் தமது பக்கத்தில் கூறியிருந்தார்.




## மலேசியா, பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து 504 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.8 ஆக பதிவானதாக நில அதிர்வு கண்காணிப்பு தேசிய மையம் தெரிவித்துள்ளது.

சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் குலுங்கின. நிலநடுக்கம் நன்கு உணரப்பட்ட தால் பீதியடைந்த மக்கள் அவசர அவசரமாக வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

எனினும், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் சேத விவரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

அதேபோல் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா லூசன் தீவுப் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவாகியுள்ளது. மணிலாவிலிருந்து 157 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

இதேவேளை, வங்கக்கடல் பகுதியில் அமைந்துள்ள அந்தமா னின் போர்ட் பிளே நகரில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் 4.1 ஆக பதிவாகியது. இது அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு வடக்கு - வடகிழக்கு 220 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டதாக தேசிய புவியியல் மையம் தெரிவித்தது.

## ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றியது சவூதி




சவூதி அரேபியாவில் ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் மொத்தமாக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை காட்டிலும் அதிகம்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட வர்களில் ஏமன் நாட்டைச் சேர்ந்த ஏழு பேர் மற்றும் சிரியா நாட்டைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர். இவர்கள் பல்வேறு கொடூரமான குற்றங்களைப் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அதில் பயங்கர வாதமும் அடங்கும் என அரசு செய்தி முகமையான எஸ்.பி.ஏ. தெரிவித்துள்ளது.

இதில் சிலர் ஐ.எஸ், அல் கெய்தா அல் லது ஏமனில் உள்ள ஹதி கிளர்ச்சி குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பல்வேறு மனித உரிமை அமைப்புகள் பல தருணங்களில் முறையான விசார ணைகள் நடைபெறுவதில்லை என்று குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை அரசு மறுக்கிறது.

தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மூன்று கட்ட நீதி விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர் என்றும் எஸ்.பி.ஏ தெரி வித்துள்ளது.

இவர்கள் மீது முக்கிய பொரு ளாதார இடங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டு, பாதுகாப்பு படையினரைக் கொன்றது, கடத்தல், பாலியல் வன்முறை மற்றும் நாட்டிற்குள் ஆயுதங்களை கடத்தியது போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சவூதி அரேபியாவில் அதிக அளவிலான மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவ தாக அம்னெஸ்டி இன்டர்நேஷனல் தெரி விக்கிறது. அதிக எண்ணிக்கையில் மரண தண்டனை விதிக்கும் நாடுகளின் பட்டியலில் சவூதி அரேபியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்த பட்டியல் அம் னெஸ்டி இன்டர்நேஷனலால் தொகுக் கப்பட்டது.

முதல் நான்கு இடங்களில் இருக்கும் நாடுகள் சீனா, ஈரான், எகிப்து மற்றும் ஈராக்.

கடந்த வருடம் 69 பேருக்கு சவூதி அரேபியாவின் மரண தண்டனை விதிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு கொரோனாத் தொற்று



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா வுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

தனக்கு கொரோனாத் தொற்று உறுதியானதை தனது ட்விட்டர் பக்கத்தில் ஒபாமா உறுதி செய்துள் ளார்.

கடந்த சில நாள்களாக தொண்டை வலியால் அவதிப்பட்டு வந்த நிலை யில் கொவிட் பரி சோதனை செய்ததில் தொற்று உறுதி யானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தனது மனைவி மிச் செலுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி இல்லையெனமுடிவுவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் இருவரும் பூஸ்டர் உட்பட 3 தடுப்பூசிகளையும் போட் டுள்ளோம். எங்களுக்கு கடும் அறி குறிகள் ஏதும் இல்லை. அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள் என்றும் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவில் தொற்று நோய் நெருக்கடி குறைந்து வரும் நிலையில் நகரங்கள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசால் விதிக்கப்பட்ட பெரும் பாலான பொது சுகாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட் டுள்ளன.

கடந்த வாரத்தில் தினசரி சரா சரியாக சுமார் 35 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. ஜனவரி நடுப்பகுதியில் தினசரி சராசரி 8 லட்சம் அளவுக்கு இருந்தது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் தரவுகளின்படி அமெ ரிக்காவின் இதுவரை 9.67 லட்சத்துக் கும் அதிகமானவர்கள் கொரோனாத் வால் இறந்துள்ளனர். 79.5 மில் லியனுக்கு அதிகமானவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்கள் எங்கிருந்தாலும் காப்பாற்றும் இயக்கம் தி.மு.க. என்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற திருவாவடுதுறை நாதஸ்வரச் சக்கரவர்த்தி டி.என்.ராஜரத்தினம் (டி.என்.ஆர்.) இல்லத்திருமண நிகழ்வினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்.

63 வயதில் அடியெடுத்து வைத்துள்ள எனது துணைவியாருக்கு முதலில் பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் இங்கு, இது தளபதி வீட்டுத்திருமணம். நம்முடைய வீட்டு திருமணம், என்று அவரவர் பாணியில் வாழ்த்துரையில் பேசினார்கள்.

ஒட்டுமொத்தமாக சொல்ல வேண்டுமானால் இது கழக குடும்பத் திருமணம். 2011 ஆம் ஆண்டு சத்யா ஸ்டூடியோவுக்கு எதிரில் உள்ள டி.என்.ராஜரத்தினம் கலையரங்கை திறந்து வைத்து கலைஞர் பேசுகையில், டி.என்.ஆர். பற்றியும், அவரது பெருமைகளைப் பற்றியும் உலகறிய எடுத்துக்கூறினார். 58 ஆண்டுகளே டி.என். ஆர். வாழ்ந்திருந்தாலும் இசை உலகிலே உலகளவில் பெருமை பெற்று விளங்கினார் என்பது வரலாறு. சுய மரியாதையை அந்த நாள்களிலேயே நிலைநாட்டியவர் டி.என்.ஆர்.

தனது தனித்தன்மையை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்கமாட்டார். யாருக்கும் தலைவணங்கிட மாட்டார். அப்படிப்பட்ட சுயமரியாதைக்காரராக வாழ்ந்தவர் அவர். 1955 ஆம் ஆண்டு ஆவடியில் காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடந்தது. இந்த மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு வந்திருந்தார். அந்த மாநாட்டையொட்டி ஊர்வலமும் நடைபெற்றது.

அந்த ஊர்வலத்தில் முன் வரிசையில் நின்று நாதஸ்வரம் வாசித்தவர்தான் நம்முடைய ராஜரத்தினம் பிள்ளை.

தாழ்ந்து கிடந்த இசைக்கலைஞர்களை உயர்த்தியவர் அவர். கழகத்தின்பால் இந்த திருமணத்திற்கு நீண்ட தொடர்பு உண்டு என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் உணர்வோடு, தமிழ்ப்பற்றோடு இருந்த, இருந்து கொண்டிருக்கிற இந்தக் குடும்பத்தில் நடைபெறும் திருமண நிகழ்விலே கலந்துகொண்டிருக்கிறோம்.

தமிழ் என்றால் நமக்கு தானாகவே ஓர் உத்வேகம் வருகிறது. அது உள்ளூர் தமிழனாக இருந்தாலும், உக்ரைனில் இருந்த தமிழனாக இருந்தாலும் சரி அவர்களைக் காப்பாற்றுகிற ஒரே இயக்கம் இந்த இயக்கம் என்பது உங்களுக்குத் தெரியும்.

உக்ரைனில் இருந்திருக்கக் கூடியவர்கள் அகதிகளாகிப் போய்விடுவார்களோ அல்லது ஆபத்தில் சிக்கி விடுவார்களோ என்று கருதிக்கொண்டிருந்த நேரத்தில், அங்கே ஏறக்குறைய தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டாயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் இந்தியாவில் எந்த மாநிலமும் முன்வராத நிலையில் முதல்முதலில் தமிழ்நாட்டில்தான் அவர்கள் அத்தனை பேரையும் அழைத்து வருவதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அவர்கள் அத்தனை பேரையும் பத்திரமாக அழைத்து வர வேண்டும் என்று முடிவு செய்து அதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்தோம் என்பது உங்களுக்குத் தெரியும். நேற்றோடு தமிழ்நாட்டைச் சேர்ந்த அத்தனை பேரும் வந்து சேர்ந்துவிட்டார்கள்.

கடைசியாக வந்த ஒன்பது பேரையும் நான் விமான நிலையத்திற்கு சென்று, அவர்களை வரவேற்ற அந்தக் காட்சியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்காக திருச்சி சிவா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு அதிகாரிகள் குழு டெல்லியில் 10 நாள்களாக அங்கேயே தங்கியிருந்து ஏற்பாடுகளைச் செய்து அத்தனை பேரையும் அழைத்து வந்திருக்கிறார்கள்.

எனவே, தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்களைக் காப்பாற்றுகிற ஒரே இயக்கம் தி.மு.க. என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இதைச் சுட்டிக்காட்டுகிறேன், என்று தனது உரையில் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டிருக்கிறார்.




# தலைவராக சோனியா காந்தி தொடர்வார் காங்கிரஸ் காரியக்குழுக் கூட்டத்தில் முடிவு

இந்தியாவில் நடந்துமுடிந்துள்ள ஐந்து மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தமை குறித்துஆராய்வதற்காக டெல்லியில் நேற்று கட்சியின் காரிய குழுக்கூட்டம்நடைபெற்றது. கட்சியின் இடைக்காலத் தலைவரான சோனியா காந்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர்கள்பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.

கட்சியின் தோல்விக்கான காரணங்கள், எதிர்காலத் திட்டங்கள், கட்சியில் மேற்கொள்ள வேண்டிய சீர் திருத்தங்கள் மற்றும் உட்கட்சித் தேர்தல் தொடர்பாக கூட்டத்தில் உரையாடப்பட்டதாகவும், குறிப்பாக சோனியாவால் கட்சியை வழிநடத்த முடியாத நிலையில், ராகுல் காந்தியை கட்சியின் தலைவராக நியமிக்கலாம் என பல்வேறு தலைவர்கள் கூறினார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கூட்டத்தில் அனைத்து தலைவர்களினதும் கருத்துக்களையும் கேட்டறிந்த சோனியா காந்தி, கட்சியை வலுப்படுத்த தேவையான மாற்றங்களை செய்யத் தயாராக இருக்கிறேன் எனக் கூறியுள்ளார். தேர்தல் தோல்விக்கு தாங்கள்தான் காரணம் என காரிய கமிட்டி கருதினால் கட்சியின் நலனுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயார் என சோனியா காந்தி தெரிவித்தார் எனவும் அதேசமயம், சோனியா காந்தி மீது தங்களுக்கு நம்பிக்கை உள்ளதாகவும் தலைவர்கள் கருத்துக் கூறியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சுமார் 5 மணி நேரம் நடந்த இக்கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் தலைமையின் மீது நம்பிக்கை உள்ளது என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அத்துடன், அமைப்புத் தேர்தல் நடத்தப் படும்வரை காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவராக சோனியா காந்தி தொடர்வார் என்றும், ஏப்ரல் மாதத்தில் சிந்தன் ஷிவிர் எனும் சிந்தனைக் கூட்டம் நடத்தப்படும் என்றும் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் வேணுகோபால், கட்சித்தலைவர் உடனடியாக சீரமைப்பு மற்றும் அமைப்பை வலுப்படுத்துவதற்கான சரியான நடவடிக்கைகளை எடுப்பார் என தெரிவித்தார். நாடாளுமன்ற பட்ஜட் கூட்டத்தொடர் முடிந்தவுடன், கட்சியின் சிந்தனைக் கூட்டம் நடத்தப்படும். என்றும், அதற்கு முன் காரிய குழு மீண்டும் கூடும் என்றும் அவர் தெரிவித்தார். சோனியா காந்தியின் தலைமை மீதான நம்பிக்கையை காரிய கமிட்டிக் கூட்டம் ஒருமனதாக மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என்றும் வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கான அமைப்புத் தேர்தல்கள் நடைபெறும் வரை சோனியா காந்தி கட்சிக்கு வழிகாட்ட வேண்டும் என்று காரியக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் விரும்புகின்றார் என கட்சியின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜ்வாலா குறிப்பிட்டுள்ளார்.

# கல்லெறிந்து மதுபானக் கடையை சேதப்படுத்திய பா.ஜ.கவின் உமாபாரதியால் போபாலில் பரபரப்பு



முதலமைச்சர் சிவராஜ் சிங் தலைமையிலான மத்தியப் பிரதேச அரசு, வெளிநாட்டு மதுபானங்கள் மீதான கலால் வரியை 13 சதவீதம் வரை குறைத்துள்ளது. வெளிநாட்டு மற்றும் நாட்டு மதுபானங்களை ஒன்றாக விற்பனை செய்யவும் மதுபானக் கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த மாநிலத்தில் 2,544 நாட்டு மதுபானக் கடைகளும், 1,061 வெளிநாட்டு மதுபானக் கடைகளும் உள்ளன என தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரும், மத்தியப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சருமான உமாபாரதி, மத்திய பிரதேசத்தில் மதுவிலக்குக் கோரி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். மதுக் கடைகளுக்கு வெளியே போராட்டம் நடத்தப்போகிறேன் என அவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து போபாலில் உள்ள ஒரு மதுபானக் கடைக்குள் சென்ற உமாபாரதி, பெரிய கல் ஒன்றை வீசி அங்கிருந்த மதுபான போத்தல்களைச் சேதப்படுத்தியுள்ளார். இது குறித்த காணொலியையும் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் பகிர்ந்துகொண்டுள்ளார்.

பர்கேடா பதானி பகுதியில் உள்ள தொழிலாளர்கள் காலனியில் ஏராளமான மதுபானக்கடைகள் உள்ளன. மதுவிற்பனையால் கூலித் தொழிலாளர்களின் பணம் வீணாகிறது. அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக இந்த மதுபானக்கடை இருப்பதால் அப்பகுதி வாசிகள் மற்றும் பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர்.

பலமுறை கடையை மூடுவதாக நிர்வாகம் தெரிவித்தது. ஆனால், அது நடக்கவில்லை. ஒரு வாரத்திற்குள் மதுக்கடையை மூட வேண்டும் என்று உள்ளாட்சி நிர்வாகத்தை எச்சரித்துள்ளேன், என்று தனது டுவிட்டர் பதிவில் உமாபாரதி குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைனில் இறந்த கர்நாடக மாணவரின் உடல் மீட்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் உத்தரவு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில், இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான உயர்மட்டக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், ராஜ்நாத் சிங், ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்னர். உக்ரைனின் போர்ச் சூழலால் உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது.

எல்லைப் பகுதிகள், கடல் மற்றும் வான் வெளியில் இந்தியாவின் பாதுகாப்புத் தயார் நிலை மற்றும் பல்வேறு அம்சங்கள் குறித்து இந்தியப் பிரதமர் மோடிக்கு அதிகாரிகள் எடுத்துரைத்தனர் எனவும், உக்ரைனில் இருந்து இந்தியர்கள் மற்றும் சில அண்டை நாடுகளைச் சேர்ந்தவர்களை வெளியேற்றுவதற்கான ஒப்ரேஷன் கங்கா திட்டத்தின்செயல்பாடுகள் மற்றும் உக்ரைனின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் அதிகாரிகள் அவருக்கு விளக்கினார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைனின் கார்கீவ் நகரில் உயிரிழந்த கர்நாடக மாணவர் நவீன் சேகரப்பாவின் உடலை மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி இந்தக் கூட்டத்தின்போது உத்தரவிட்டுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோறளைப்பற்று மத்தியில் சமுர்த்தி நலத்திட்டங்கள்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் சமுதாய அடிப்படை அமைப்பு அலுவலகத் திறப்பு, சௌபாக்கியா வீடு கையளிப்பு, வாழ்வாதாரத்தினை மேம்படுத்த உதவிகள், சமுதாய அடிப்படை அமைப்பினருக்கு அலுவலகப்பைகள் வழங்கும் நிகழ்வு என்பன செயலகத்தில் இடம்பெற்றன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸ்ஸமில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.ஏ.சி.றமீசா, மாவட்ட சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் ஜே.எப்.மனோகிதராஜ், மாவட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்குப் பொறுப்பான முகாமையாளர் கே.பகீரதன், பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளரும் தலைமையக முகாமையாளருமான எஸ்.ஏ.எம்.பஸீர், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

தியாவட்டவானின் அந்நூர் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதுடன், சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தின் வாழைச்சேனை 206டீ பிரதேசத்தில் பயனாளி மற்றும் மக்கள் பங்களிப்புடன் ஏழு லட்சம் ரூபா பெறுமதியில் கட்டடப்பட்ட வீடு உரிய பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

அத்தோடு, 2021ஆம் ஆண்டு தெரிவு செய்யப் பட்ட சமுர்த்தி பயனாளிக்கு பால் கறக்கும் பசுக்கள் வழங்கி வைக்கப்பட்டன. சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கான உறுப்பினர்களுக்கு அலுவலக பைகள் வழங்கப்பட்டன.

சமுர்த்தி பெறும் இரண்டு பயனாளிகள் வாழ்வாதாரம் உயர்வடைந்த நிலையில் சமுர்த்திக் கொடுப்பனவு அட்டையை தாமாக முன்வந்து ஒப்படைத்ததமையுடன், சமுர்த்தி திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

# கடை உடைத்து கைத்தொலைபேசிகள் திருட்டு; பெண் உட்பட நால்வர் கைது!



காத்தான்குடியில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு மேற்கொண்ட பெண் உட்பட 4 பேரை, நேற்றுத் தாங்கள் கைது செய்தோம் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 8 லட்சம் ரூபா பெறுமதியான 23 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி, காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள கையடக்க தொலைபேசி நிலையம் பூட்டியிருந்த நிலையில், அதை உடைத்து அங்கிருந்த சுமர் 24 லட்சம் ரூபா பெறுமதியான 75 கையடக்க தொலைபேசிகள் சூறையாடப்பட்டன.

இது தொடர்பான ஆரம்ப பொலிஸ் விசாரணையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் 12 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைது செய்யப்பட்டார்.

அவரைத்தொடர்ந்து, இறக்காமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட மூவர் 11 கையடக்க தொலைபேசிகளுடன் கைது செய்யப்பட்டனர். இந்தத் திருட்டுச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தப்பியோடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ‘நாடும் தேசமும் உலகமும் அவளே’ காரைதீவில் நேற்று மகளிர் தினம்

(நூருல் ஹுதா உமர்)

‘நாடும் தேசமும் உலகமும் அவளே’ எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டிற்கான மகளிர் தின நிகழ்வுகள் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே .ஜெகதீசன் கலந்து கொண்டார். காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், நிர்வாக உத்தியோகத்தர் த.கமலநாதன், அம்பாறை மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க, கேப்ஸோ நிறுவன திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்தாத், காரைதீவு பிரதேச மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





# வீதியோரக் கான்களின் மூடிகள் உடைந்து ஆபத்தான நிலையில்!

## கல்முனை மாநகரப் பகுதியில் அவல நிலைமை

(எஸ்.அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை பிரிவில் உள்ள சாய்ந்தமருது ஒராபி பாஷா வீதியில் உள்ள வடிகான் மூடி அடைப்புகள் உடைந்து சேதமடைந்துள்ளமையினால் வீதியூடான போக்குவரத்து செய்யும்பொது மக்கள் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவிசனம்தெரிவிக்கின்றனர்.

சாய்ந்தமருது ஒராபி பாஷா வீதியின் ஸாஹிரா தேசிய பாடசாலையை அண்மித்த கோஸ்வேக்கு குறுக்காக உள்ள வடிகான் மூடிகளே இவ்வாறு நீண்டகாலமாக உடைந்து காணப்படுகின்றன. இதனால் வீதியில் இரவு வேளையில் போக்குவரத்து செய்யும் மக்களுக்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியின் ஊடாக தினம் தோறும் ஆயிரக்கணக் கான பாடசாலை மாணவர்கள், மீன்பிடி தொழிலாளர்கள் மற்றும் வீதியில் உள்ள பொது மக்கள் தங்களது போக்குவரத்தை மேற்கொன்டு வரும் நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.


இதேவேளை இந்த வடிகானினால் வாகனங்கள் பாதிப்படையக்கூடிய ஆபத்தும் உள்ளது.

கல்முனை மாநகர சபை பிரிவில் கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள பல இடங்களிலும், வீதிகளில் வடிகான் மூடிகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தொழில்முறைக் கால்பந்தாட்டப் போட்டிகளில் அதிக கோல்களை அடித்தவரானார் ரொனால்டோ




கால்பந்தாட்ட உலகில், அதிக கோல் அடித்த வீரர் என்ற புதிய சாதனை படைத்துள்ளார் போர்ச்சுக் கல்லின் கிறிஸ்டியானா ரொனால்டோ.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இங்கிலீஸ் பிரிமியர் கால்பந்து தொடரில், நேற்று இரவு நடைபெற்ற போட்டியில் மன்செஸ்டர் யுனைடெட் மற்றும் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகள் மோதின. இதில் மன்செஸ்டர் யுனைடெட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மன்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடிய போர்ச்சுக்கல் வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ ஹாட்ரிக் கோல்களை அடித்து அசத்தினார். அவர் இரண்டாவது கோலை அடித்தபோது, தொழில்முறை கால்பந்து பிரிவில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த ஜோசப் பைகோன் அடித்த 805 கோல்களே இதுவரை சாதனையாக இருந்த நிலையில், ரொனால்டோ அதை முறியடித் துள்ளார். அவர் தற்போது 807 கோல்களுடன் முதலி டத்தில் உள்ளார்.






# ஐ.பி.எல்.2022 இன் ஆரம்பப் போட்டிகள் வெளிநாட்டு வீரர்கள் தவறவிடுவர்

கிளென் மக்ஸ்வெல், பட் கமின்ஸ், குயின்ரன் டி கொக், ரபாடா உள்ளிட்ட 26 வெளிநாட்டு வீரர் கள் இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். சீசனின் ஆரம்பப் போட்டிகளில் விளையாட மாட்டார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஐ.பி.எல். சீசன் இன்னும் 15 நாள்க ளுக்குள் ஆரம்பமாகவுள்ளது. ஆனால், அதே வேளையில் தேசிய கிரிக்கெட் அணிகளுக்கான பல சர்வதேசப் போட்டிகள் ஏற்கனவே திட்ட மிடப்பட்டுள்ளன. அந்தந்த நாடுகளின் வாரியங்கள் தங்கள் வீரர்களை சர்வதேசப் போட்டிகளைத் தவிர்த்துவிட்டு ஐ.பி.எல்.லில் பங்கேற்க அனும திக்காது.

இதனால், ஆரம்ப ஆட்டங்களில் பல ஐ.பி.எல். அணிகள் தங்கள் முக்கிய சர்வதேச நட்சத் திரங்களை இழக்க நேரிடும் என்று தெரியவந் துள்ளது.

இங்கிலாந்து தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. தொடரின் கடைசி போட்டி மார்ச் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளும் தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. அதைத் தொடர்ந்து மூன்று ஒருநாள் மற்றும் ஒரு ரி-20 போட்டிகள் நடைபெறவுள்ளன. டெஸ்ட் தொடர் மார்ச் 25 ஆம் திகதியும், முழுமையான சுற்றுப்பயணம் ஏப்ரல் 5ஆம் திகதியும் முடிவடையவுள்ளன. சில முக்கிய வீரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளுக்கு ஓய்வு வழங்கப்பட்டாலும், அவர்கள் தொடர் நிறைவடைந்த பின்னரே ஐ.பி.எல்லில் விளையாடுவர் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் ஏற்கனவே அறிவித்துவிட்டது.

தென்னாபிரிக்க அணி பங்களாதேசுக்கு எதிராக மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. இந்த அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் மார்ச் 23ஆம் திகதியும், டெஸ்ட் தொடர் ஏப்ரல் 12 ஆம் திகதியும் முடிவடையவுள்ளன.

ஜோஃப்ரா ஆர்ச்சர், பட் கமின்ஸ், ஆரோன் பின்ச், வன் டெர் டுசென், மார்கோ ஜோன்சன், சீன் அபோட், ஐடன் மார்க்ரம், டேவிட் வோனர், மிட்செல் மார்ஷ், அன்ரிச் நார்ட்ஜே, டுவைன் பிரிட் டோரியஸ், ரஹ்மான், லுங்கி இன்கிடி, ஜேசன் பெஹ்ரன்டோர்ப், க்ளென் மக்ஸ்வெல், ஜோஷ் ஹசல்வுட், ஜொனி பெயர்ஸ்டோ, ககிசோ ரபாடா, நதன் எல்லிஸ், மார்கஸ் ஸ்டோய்னிஸ், ஜேசன் ஹோல்டர், கைல் மேயர்ஸ், மார்க் வூட், குயின் ரன் டி கொக், டேவிட் மில்லர், அல்ஸாரி ஜோசப் ஆகிய வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல்.லின் முதல் போட்டிகளில் விளையாடவியலாத நிலை ஏற்பட்டுள்ளது.

# பீஜிங் பரா ஒலிம்பிக் தொடர் நிறைவு பதக்கப்பட்டியலில் சீனா முதலிடம்

பீஜிங்கில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டித் தொடரின் நிறை வில் 18 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பெற்றுள்ளது. 18 தங்கப் பதக்கங்கள், 20 வெண்கலம், 23 வெள்ளி அடங்கலாக மொத்தமாக 61 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பெற்றது.

11 தங்கம், 10 வெண்கலம், 8 வெள்ளிப் பதக்கங்களுடன் மொத்தமாக 29 பதக்கங்களை வென்ற உக்ரைன் இரண்டாவது இடத்தையும், 8 தங்கம், 6 வெண்கலம், 11 வெள்ளிப் பதக்கங் களுடன் மொத்தமாக 25 பதக்கங்களோடு கனடா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. 7 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலங்க ளுடன் மொத்தமாக 12 பதக்கங்களுடன் பிரான்ஸ் நான்காவது இடத்தையும், 4 தங்கம், 11 வெண்கலம், 3 வெள்ளிப் பதக்கங்க ளுடன் மொத்தமாக 20 பதக்கங்களைப் பெற்ற அமெரிக்கா ஐந்தாவது இடத்தையும் பெற்றன. ஒஸ்திரியா, ஜேர்மனி, நோர்வே, ஜப்பான், ஸ்லொவாக்கியா ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன.



# காயப்படுத்திய வார்த்தைகளால் மனமுடைந்து கண்ணீர் சிந்திய டென்னிஸ் வீராங்கனை ஒசாகா

இந்தியன் வெல்ஸில் நடைபெற்ற போட்டியில் நான்கு முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற ஜப்பானின் நவாமி ஒசாகா, பார்வையாளர் ஒருவரின் வசைச்சொற்களால் மனமுடைந்து மைதானத்திலேயே கண்ணீர் சிந்தியுள்ளார்

டபிள்யு.ரி.ஏ. தொடரில் இந்தியன் வெல்ஸில் நடைபெற்ற போட்டியில் ஜப்பானின் நவாமி ஒசாகா, வெரோனிகா குடெர்மெடோவா இருவரும் மோதினர். இந்தப் போட்டியில் வெரோனிகா 6-0, 6-4 என்ற நேர்செட் கணக்கில் ஒசாகாவை வீழ்த்தி னார்.

ஆட்டம் தொடங்கியவுடன் பார்வையாளர் ஒருவர் நவோமி ஒசாகா பெயரைச் சொல்லி அழைத்து அவரை வசைபாடினார். இதைக் கேட்டவுடன் ஒசாகா அதிர்ச்சியடைந்தார். நடுவரிடம் இது தொடர்பாக உடனடியாக முறையிட்டார் ஒசாகா. நடவடிக்கை எடுக்கு மாறு அவர் கெஞ்சும் தொனியில் நடுவரிடம் கூறினார். ஆனால், நடுவர் ஆட்டத்தை தொடரச் சொல்ல, கண்ணீரை துடைத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் விளையாடத் துவங்கினார். ஆனால் வசைச் சொல்லால் அவரது சமநிலை இழந்துபோனதால். பெரிய போராட்டமின்றி தொடர்ந்து இரு செட்களை இழந்து தோல் வியைத் தழுவினார் ஒசாகா.

போட்டிக்குப் பிறகு கருத்துத் தெரிவித்த ஒசாகா, அந்த வார்த்தைகள் தன்னை அதி களவாகப் புண்படுத்தியது என கருதவில்லை என்றும் ஆனால், வீனஸ் மற்றும் செரீனா வில்லியம்ஸ்க்கு இந்தியன் வெல்ஸில் நிகழ்ந்த சம்பவத்தை அது நினைவூட்டியது, என்றும் குறிப்பிட்டார்.

2001 ஆம் ஆண்டு இதே இந்தியன் வெல்ஸ் மைதானத்தில் வீனஸ் மற்றும் செரினா வில்லியம்ஸ் சகோதரிகள் பார்வையாளர்களால் நிறவெறிச் சொற்களால் கடுமையாக வசைபாடப்பட்டனர். இதையடுத்து வில்லியம்ஸ் சகோதரிகள் 14 ஆண்டுகள் இம்மைதானத்தில் விளையாடு வதைப் புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.



# எல்லாத் துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது பெருந்தோட்டத்துறை மட்டும் மாறவில்லை!

## இப்படிக் கூறுகிறார் ஜீவன்



நாட்டில் எல்லாத் துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது. ஆனால் பெருந்தோட்டத்துறை மட்டும் 150 ஆண்டுகளுக்கு மேலாக அப்படியே உள்ளது. இந்நிலைமை மாற வேண்டும். அதனை செய்வதற்கே நாம் வந்துள்ளோம். இதற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாலின சமத்துவம் என்ற தொனிப்பொருளின்கீழ் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் ஹற்றன் மாநிலத்துக்கான மகளிர் தின விழா கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கப்பல் துறை, ஹோட்டல்துறை என எல்லாத் துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது. ஆனால் பெருந் தோட்டத்துறை மட்டும் தான் மாறவில்லை. நமது அழிவுக்கு நாமேதான் காரணம். ஏனெனில் நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க முடி யாது, தோட்டங்கள் எல்லாம் காடா கியுள்ளன என தோட்டத் தொழிலாளர் களுக்காக நாம் நீதிமன்றத்தில் வாதிட்டு வருகின்றோம்.

ஆனால், நிர்வாகங்களால் நடத்தப்படும், கொழுந்து பறிக்கும் போட்டியில் பங்கேற்று, 3 மணிநேரத்துக்குள் 40 கிலோ பறிந்துள்ளனர். கோடி நன்றிகள், பாராட்டியே ஆக வேண்டும். 20 கிலோ பறிக்கமுடியாது என்கிறீர்கள், அங்கே 40 கிலோ பறித்துள்ளனர் என எம்மிடம் கேட்கப்படுகின்றது.

தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக அல்ல, சமாதி கட்டவே கொழுந்து பறிக்கும் போட்டி நடத்தப்படுகின்றது. இது நமக்குப் புரிவதில்லை. இதனைச் சொன்னால், ஜீவன் தொண்டமான் விமர்சிக்கின்றார் எனக் கூறுகின்றனர். எனக்கு பாராட்டி பேசிப் பழக்கம் இல்லை. தவறு இடம்பெற்றால் அதனைத் தைரியமாகச் சுட்டிக்காட்டுவேன்.

அதேவேளை, மலையகப் பெருந் தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதாரத் துறையை மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. அதற்கு நாம்தான் காரணம். ஆனால் அதனை வைத்து அரசியல் செய்யவில்லை. நாம் 10 விடயங்களைச் செய்தால்கூட, செய்யாத 11 ஆவது விடயம் பற்றியே பேசப்படுகின்றது.

நம்பிக்கையை இழந்துவிடவேண்டாம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பயணம் தற்போது சற்று மெதுவாக இருந்தாலும் நாம் முன்னோக்கி சென்று கொண்டிருக்கின்றோம் என்பதைக் கூறியாக வேண்டும். - என்றும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## தாய் மற்றும் மகள் மீது வேலணையில் கத்திக்குத்து

### குத்தியவரும் தனது உயிரை மாய்க்க முயற்சி

தாய்க்கும் மகளுக்கும் கத்தியால் குத்திய நபர் தனது உயிரையும்மாய்க்கமுயன்றநிலையில்மூவரும்யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – வேலணை பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு –

குடும்பப் பெண் மற்றும் அந்தப் பெண்ணின் மகள் ஆகியோர் மீது ஒருவர் வீடு புகுந்து சரமாரியாகக் கத்தியால் குத்தி விட்டு, தானும் அதிகளவான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த அயலவர்கள் மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

## மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமைகள்; இலங்கை பயணம் குறித்து பிரித்தானியா எச்சரிக்கை

மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட பொருள்களுக்கான பற்றாக்குறை காரணமாகப் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகக் கூறி இலங்கைக்கு செல்வதற்கானபயணஆலோசனையைபிரித்தானியா புதுப்பித்துள்ளது.

இறக்குமதிக்கு செலுத்துவதற்குப் பணம் இல்லாதமை காரணமாக இலங்கை தற்போது அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறையை அனுபவித்து வருவதாக பிரித்தானியா தமது குடி மக்களுக்குத் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டபகுதிகளில்முடக்கக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்றும், நாட்டில் குறுகிய பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படலாம் என பிரித்தானிய அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் மின்சாரம் தடைப்படும் என்றும் டெங்கு மற்றும் கொரோனாத் தொற்று காரணமாக குறுகிய அறிவிப்பில் விமானங்கள் மற்றும் விமான நிலைய நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## பனிக்கன்குளம் அ.த.க. பாடசாலைக்கு 47 வருடத்தின்பின் மாணவியால் பெருமை!






முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள பனிக்கன் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2021 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் தவசீலன் புவணாயினி 162 புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாங்குளம் - பனிக்கன்குளம் அ.த.க பாடசாலையில் 1975ஆம் ஆண்டு மாணவி ஒருவர் மாவட்ட மட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றிருந்தார்.

அதன் பின்னர் பல மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தாலும் கடந்த 47 வருடத்தின் பின்பு மாவட்ட வெட்டுப் புள்ளியைத் தாண்டி சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கும், சமூகத்திற்கும் பெருமை சேர்த்த செல்வி த.புவணாயினிக்கு பாடசாலை சமூகம் மற் றும் சமூக செயற்பாட்டாளர்கள், கல்விய லாளர்கள் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் ஹோட்டலில் களியாட்டம் யுவதிகள் உட்பட 39 பேர் கைது!

புத்தளத்தில் ஹோட்டல் ஒன்றில் களியாட்ட நிகழ்வில் ஈடுபட்ட யுவதிகள் உட்பட 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ, வைக்கல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேஸ்புக் விருந்தொன்று சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது 39 சந்தேக நபர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மட்டக்குளி, கனேமுல்ல, நீர்கொழும்பு, அநுராதபுரம், வத்தளை மற்றும் மீரிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 மற்றும் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் ஆவர்.

சந்தேகநபர்களிடம் 02 கிராம் 110 மில்லிகிராம் ஐஸ், 05 கிராம் ஹஷிஸ், 27 கிராம் கஞ்சா மற்றும் 15 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை தற்காலிகமாக தடைசெய்க!

### மஹிந்த அமரவீர பணிப்பு

மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதைத் தற்காலிகமாகத் தடை செய்யுமாறு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். மணல் அகழ்வால் பாரிய சுற்றாடல் பாதிப்புகள் ஏற்படுத்துகின்றன என செய்திகள் வெளியாகி வருகின் றன எனவும், மணல் அகழ்வால் அம்பலாந்தோட்டை வலேவத்தை கிராமமே முற்றாக அழிவடைந்துள்ளதாகவும்அமைச்சர்தெரிவித்துள்ளார்.

மணல் அகழ்வால் விவசாயம் செய்யக்கூடிய வயல் நிலங்களும் தென்னை போன்ற பொருளாதார ரீதியில் பயிரிடப்பட்ட நிலங்களும் அழிந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. எனவே, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிறப்புக் குழுவொன்றை நியமித்து, விரிவான விசாரணை நடத்தி அறிக்கையைப் பெற்று, அந்த அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதுவரை மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2022இல் வெளியிடப்பெற்றது.